## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS. No. 36/2022 | Date : 15.10.2024 | PW 3 |
|---|---|---|
| Name: தண்டபாணி | த/பெ. சுப்ரமணி | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இவ்வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. முத்துசாமி எனது உறவினரா என்றால் இல்லை. இவ்வழக்கைப்பற்றி எனக்கு அனைத்து விவரங்களும் தெரியுமா என்றால் தெரியும். நான் நங்கவள்ளியில் சுமார் 60 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வாதி முத்துசாமியின் குடும்ப விவரங்கள் பற்றிஎனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 60 வருடங்களாக தெரியும். வாதி இவ்வழக்கை எதற்காகதாக்கல் செய்துள்ளார் என்றால் நங்கவள்ளியில் உள்ள கல் மண்டபம் வாதியின் குடும்ப சொத்து என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். மேற்படி கல் மண்டபத்தில் என்னென்ன விசேஷங்கள் நடைபெறும் என்றால் பங்குனி மாதத்தில் கருட சேவை கட்டளையும், மார்கழி மாதத்தில் ஈஸ்வரன் கோவிலின் ஆரூத்ரா தரிசனமும் நடைபெறும். மேற்படி விசேசங்களுக்கு யார் செலவு செய்வார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் முத்துசாமியின் தகப்பனார்செலவு செய்து கொண்டுஇருந்தார். அவருக்கு பிறகு முத்துசாமி செலவு செய்து வருகிறார். கல் மண்டபம் கோவில் சொத்து என்றால் சரியல்ல. அது தனியார் சொத்தாகும். கல் மண்டபத்தில் ஆரிய வைஸ்யா சமூகத்தினர் திருமணம் செய்வார்கள். அதற்கு பின் பக்கத்தில் உள்ள காலி இடத்தில் இறந்தவர்களுக்கு கர்ம காரியங்கள் செய்வார்கள். மேற்படி விசேசங்கள் எந்த சமூகத்தினர் அறங்காவலர்களாக இருந்து செய்து வந்தார்கள் என்றால் அதற்கு அறங்காவர்கள் யாரும் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் ஆரிய வைஸ்யா சமூகத்தினர் அறங்காவலர்களாக இருந்து மேற்படி விசேசங்களை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. உற்சவ செலவுகள் அனைத்தையும் கோவில் வருமானத்தில் வந்த தொகையை கொண்டு செய்தார்கள் என்றால் சரியல்ல. உற்சவம் ஏதுமில்லை. கட்டளை தான் செய்வார்கள். வாதிகள் எத்தனை வருடங்களாக நங்கவள்ளியில் குடியிருந்து வருகீறார்கள் என்றால் எனக்கு தற்போது 76 வயதாகிறது. எனக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்து வாதிகள் நங்கவள்ளியில்தான் வசித்து வருகிறார்கள். வாதியின் முன்னோர்கள் எங்கிருந்தார்கள் என்றால் வாதியின் முன்னோர்களான அவருடைய கொல்லு தாத்தா நங்கவள்ளியில் தான் இருந்தார். நான் சொல்வது தவறு என்றும் வாதியின் முன்னோர் திருச்செங்கோட்டை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. வாதியின் முன்னோர் திருச்செங்கோட்டை சேர்ந்தவர்கள் என்பதற்கு ஆதாரம் கல்வெட்டில் உள்ளது என்றால் வாதியின் கொல்லுதாத்தா

நங்கவள்ளியில் தான் இருந்தார் சுந்தரம் செட்டியார் கல் மண்டபத்தை புணரமைப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கல் மண்டபம் புராதண மண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கல் மண்டபத்தில் சாமி வைக்க மேடையும் அதற்கு பின்னால் சாமி சிலையும் உள்ளது என்றால் மணமக்கள் உட்கார்வதற்கான மேடையும், அதற்கு பின்னால் மனித உருவம் கும்பிடுவது போல சிலையும் உள்ளது. வாதி கட்டளை செய்தது குறித்து ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கான ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை. வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி கல் மண்டபத்தில் நடைபெறும் கருட உற்சவத்தை சேலத்தை சேர்ந்த பர்கி கோபால் செட்டியார் மற்றும் எஸ்.வி. மளிகை ஆகியோர் மூலம் தான் கட்டளை செய்யப்படுகிறது என்றால் சரியல்ல. பர்கி கோபால் செட்டியார் யாரென்று எனக்கு தெரியாது. எஸ்.வி. மளிகை என்பது இரண்டாவது வாதி குடும்பத்தினர். கல் மண்டபம் வாதியின் குடும்ப சொத்தாகும். கல் மண்டபத்தில் யார் யாருக்கு இலவசமாக திருமணம் நடைபெற்றது என்றால் ராஜமாணிக்கம் செட்டியார் மகள்கள் செண்பகம் மற்றும் கற்பகம் ஆகியோர்களுக்கும் டி.ஏ.நரசிம்ம செட்டியார் மகள் ஜோதி என்பவருக்கும், சுந்தரம் செட்டியார் மகள் சித்திரலேகா என்பவருக்கும் மேற்படி கல் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. வாதியின் அப்பாவிற்கு 60 வருடம் திருமணம் மற்றும் 70 வது வருட திருமண விழா மேற்படி கல் மண்டபத்தில் நடைபெற்றது. கல் மண்டபத்தில் மார்கழி மற்றும் பங்குனி மாத கருட உற்சவம் ஆகியவை சேலம் சின்னக்கடை வீதியை சேர்ந்த ஆரிய வைஸ்யா சமூகத்தைசேர்ந்த ராமசாமி செட்டியார் தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. கல் மண்டபம் பொது சொத்து என்றால் சரியல்ல. சேலம் செவ்வாய்பேட்டையை சேர்ந்த தீர்த்தா செட்டியார் யாரென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கல் மண்டபத்திற்கு பின்னால் உள்ள கிணறு எப்போது வெட்டப்பட்டது என்றால் 1960 ம் வருட வாக்கில் வெட்டியிருப்பார்கள். கிணறு வெட்டியதை நான் நேரில் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. கிணறு வெட்டுவதற்காக வாதியின் அப்பா ஆள் அனுப்புமாறு என் அப்பாவிடம் கேட்டபோது அதற்கான ஆட்களை எனது அப்பா அனுப்பிய விவரம் எனக்கு தெரியும். கல் மண்டபம் நங்கவள்ளியில் உள்ள அருள்மிகு லஷ்மி நரசிம்ம சுவாமி மற்றும் சோமேஸ்வரர் சுவாமி கோயில்களுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. மேற்படி விவரம் தெரிந்து கொண்டே நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கல் மண்டபத்தில் நடைபெறும் உற்சவங்களை நான் எப்போது பார்த்தேன் என்றால் சென்ற வருடம் கூட பார்த்தேன். கல் மண்டபத்தில் பழைய ஜன்னல்களை மாற்றிவிட்டு புதியதாக மாற்றியுள்ளார்கள் என்றால் சரியல்ல. கல் மண்டபத்தை குடோனாக பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. அதிகமாக பொருட்கள் வந்தால் அதில் வைப்பார்கள் பிறகு அதை எடுத்துவிடுவார்கள். சின்னம்மாள் (எ) பாப்பம்மாள்

என்ற பெயரில் கட்டளை நிர்வாக இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி சின்னம்மாள் (எ) பாப்பம்மாள் கட்டளை நிர்வாகத்தை ஆயிரம் வைஸ்யா சமூகத்தை சேர்ந்த ராமசாமி செட்டியார் மற்றும் சீனிவாச செட்டியார் பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கட்டளைக்கு சொந்தமான நிலங்கள் உள்ளது என்றால் சரியல்ல. கல் மண்டபத்தில் நடைபெறும் உற்சவத்திற்கு பெரிய சோரகை கிராமத்தில் உள்ள 10 ஏக்கர் 59 செண்ட் நிலத்தில் இருந்து வரும் வருமானத்தை கொண்டு செலவு செய்வார்கள் என்றால் சரியல்ல. கல் மண்டபத்தை குடோனாக எத்தனை வருடங்களாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சுமார்60 வருடங்களாக பொருட்கள் அதிகமாக வந்தால் அதில் வைத்து எடுத்து கொள்வார்கள். சேலம் சின்னக்கடை வீதியை சேர்ந்த ராமசாமி செட்டியார் மற்றும் சீனிவாச செட்டியார்தான் முன்னால் அறங்காவலர்களாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. கல் மண்டபத்தை பராமரிக்கும் பொறுப்பு மற்றும் சாவி ஆகியவை யாரிடம் இருந்தது என்றால் வாதியின் தகப்பனாரிடம் இருந்தது. அதன்பிறகு வாதியிடம் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கல் மண்டபத்தை நான் பார்த்துளளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி கல் மண்டபத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது என்றால் கல்யாண மண்டபமாக உள்ளது. கல் மண்டபத்தை உற்சவ காலத்தை தவிர மற்ற நாட்களில் குடோனாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. கல் மண்டபத்திற்கு முன்பக்கமாக கடைகளை கட்டி வாடகைக்கு விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. கல் மண்டபத்திற்கு பக்கவாட்டில்தான் கடைகள் உள்ளது. கல் மண்டபத்தில் சாமி உட்கார வைக்க மேடையும் ஊஞ்சல் சேவை செய்ய வளையமும் உள்ளது என்றால் கல் மண்டபத்தில் உள்ள மேடை மணமக்கள் உட்காரவும், ஊஞ்சல் வளையம் அவர்களது சமூகத்தின்படி மணமக்கள் ஊஞ்சல் சேவை செய்து பிறகு அதை எடுத்து சென்று விடுவார்கள். நான் வாதிக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—தண்டபாணி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.